
# யாழ்ப்பாணக் காசுகள்




**வி. சிவசாமி, எம். ஏ.**
விரிவுரையாளர்
யாழ்ப்பாணக் கல்லூரி
வட்டுக்கோட்டை

1974

# யாழ்ப்பாணக் காசுகள்

---

**பொது :**

பழைய காலம் தொட்டு மனிதன் பயன்படுத்தி வந்த சாதனங்களிலே நாணயமும் ஒன்றாகும். பண்டமாற்று, மந்தை, சிப்பிகள், சேகழி, உலோகத் துண்டுகள் முதலியன வெவ்வேறு காலங்களிலே மனிதனுக்குத் தேவையான பொருட்களைப் பெறுதற்குப் பெறுமதியுள்ளனவாகப் பயன்படுத்தப்பட்டன. முடிவிலே நாணயம் உண்டாயிற்று. மனித நாகரிக வரலாற்றிலே குறிப்பாக பொருளாதார வரலாற்றிலே நாணயத்தின் தோற்றமும் வளர்ச்சியும் புரட்சிகரமான ஒரு சம்பவமாகும். இலங்கையிலே கி. மு. ஆறாம் நூற்றாண்டு தொட்டாவது நாணயங்கள் புழக்கத்திலிருந்து வந்தன. ஈழத்தின் பிற பகுதிகளைப் போலவே, வடக்கிலுள்ள யாழ்ப்பாணக் குடாநாட்டிலும் நீண்ட காலமாக மனிதன் நடமாடி வருகின்றான் என்பதற்கு நாணயங்களும் சான்றாகும்.

**கிடைக்குமிடங்கள் :**

யாழ்ப்பாணத்திலே, வெவ்வேறு காலத்தைச் சேர்ந்த நாணயங்கள் பல்வேறு தொகைகளிலே கந்தரோடை, வல்லிபுரம், நாகர்கோவில், புலோலி, மட்டுவில், நல்லூர், கோப்பாய், அச்சுவேலி, கொக்குவில், மானிப்பாய், பண்டத்தரிப்பு, தெல்லிப்பழை, தொல்புரம், வட்டுக்கோட்டை, அல்லைப்பிட்டி, மண்கும்பான், நாரந்தனை, புங்குடுதீவு முதலிய இடங்களில் கிடைத்திருப்பினும் கந்தரோடை, வல்லிபுரம் ஆகியனவே இன்றைய நிலையிலே தொல்பொருளியற் களஞ்சியங்களாகும். கி. மு. ஆறு நூற்றாண்டு தொடக்கம் இக்காலம் வரையுள்ளன. உள்நாட்டு, வெளிநாட்டு நாணயங்கள் தொடர்ச்சியாக முதலிரு இடங்களிலும் கிடைத்துள்ளன. பிற இடங்களிலே குறிப்பிட்ட ஒரு காலத்தைச் சேர்ந்த நாணயங்களே கிடைத்துள்ளன. பல இடங்களிலே கிடைத்துவரும் நாணயங்களைப் பற்றிய விபரங்களோ, அவை எவ்வாறு மறைகின்றன என்பதுபற்றியோ ஒன்றும் தெளிவில்லை. யாழ்ப்பாணத்திலே கிடைத்துவரும் நாணயங்களைப்பற்றி திரு. போல், இ. பீரிஸ், எச். டபிள்யூ கொட்றிங்ரன், முதலியார் செ. இராசநாயகம், சுவாமி ஞானப்பிரகாசர் போன்ற அறிஞர் ஆராய்ந்துள்ளனர். பின்னரோ, நிலத்தினைப் பண்படுத்தும் போதோ, கட்டிடத்திற்கு அத்திவாரம் வெட்டும்போதோ, மண் வெட்டும்போதோ பலகாசுகளும் பிற தொல்பொருளியற் சின்னங்

களும் இன்றும் வெளிப்படுகின்றன.

புராணஸ் :

இந்தியாவிலும், ஈழத்திலும் கிடைத்துள்ள காலத்தால் மூத்திய பழைய நாணயங்கள் புராணஸ் (பழைய) என்ற வகையினைச் சேர்ந்தவை. இவை கார்ஷாபண என மேலும் வடமொழியிலும் கஹாபணு எனப் பாளி மொழியிலும், கஹவணு என ஆதிச் சிங்கள மொழியிலும் அழைக்கப்பட்டன. இவை பொன், வெள்ளி, செம்பு முதலிய உலோகங்களாலானவை. பரவலாக இந்தியாவடங்கலும் ஈழத்திலும் இவ்வகைக் காசுகள் கிடைத்துள்ளன. யாழ்ப்பாணத்திலே கந்தரோடை, வல்லிபுரம் முதலிய இடங்களிலே கிடைக்கின்றன.

இவை பெரும்பாலும் நீள் சதுர வடிவின பிந்திய காலத்தியவை. சில வட்டமானவை; ஒரு சில முட்டை வடிவின; தடிப்பும் கூடியவை. சராசரியாக 56 கிறெயின்ஸ் நிறை கொண்டவை. கந்தரோடையிலே கிடைத்தவற்றுட் சில வெள்ளியால் ஆனவை. சில வெள்ளிமுலாம் பூசப்பெற்ற செப்புக் காசுகள்: சில முற்றுகவே செப்புக் காசுகள்; பொற்காசுகளும் உண்டு. இவை யனைத்தும் உலோகத் தகடுகளை, நீட்டாக அடித்து வெட்டப்பட்டவை. தேவையாயின், அவற்றின் மூலை ஓரங்களும் வெட்டப்படும். மூன்புறத்திலும் சில வேளை இரு புறங்களிலும், இலச்சினைகள் குத்தப்படும்; பின்புறத்தில் இலச்சினைகள் குறைவு அல்லது இல்லை. சிலவற்றில், ஒன்றுக்கு மேற்பட்ட இலச்சினைகள் அழுத்தமாகக் குத்தப்பட்டிருக்கும்

இந்தியாவிலே கிடைத்துள்ள புராணஸ்' காசுகளிலே மூந்நூறுக்கு மேற்பட்ட இலச்சினைகள் உள்ளனவாக அறிஞர் குறிப்பிட்டுள்ளனர். இலங்கையிலே கிடைத்தவற்றிலே, சூரியன் மிருகம், பறவை ஸ்வஸ்திகா, மரம், பிறை, சக்கரம், சைத்தியம் முதலியன காணப்படுகின்றன. இக்காசுகள் சுமார் கி. மு. 1000 தொடக்கம் இந்தியாவிலே வழங்கி வருவதாகக் கூறப்படினும், இலங்கையிலே கி. மு. ஆறும் நூற்றுண்டு தொடக்கம் கி. பி. இரண்டாம் நூற்றுண்டு அல்லது சற்றுப் பிந்திய காலம் வரை நிலவின எனலாம். இவற்றைத் தொடக்கத்திலே சமயக் குழுவினர், வணிகக் குழுவினர் போன்ரோர் வெளியிட்டனர்; காலப்போக்கில் இவை மன்னரின் அனுமதியுடன் வெளிவந்தன. இதனுற்றுன் சமயக் குறிகள், குழூக்குறிகள் சில இவற்றிடம் பெற்றன. இவற்றிற் சில இந்தியாவிலிருந்து கொண்டு வரப்பட்டவை; வேறு சில இலங்கையிலே வெளியிடப்பட்டவை.

இவ்வகை நாணயங்களோடும், குறிப்பாக அவற்றைத் தொடர்ந்தும் குத்தப்பட்ட இலச்சினைகள் ஒன்றாக வார்க்கப்பட்டு உருவாக்கப்பட்ட காசுகள் (die struck coins) வெளிவந்தன. முதலில் ஒருபுறத்திலும், பின் இருபுறங்களிலும் இலச்சினைகளிடம் பெற்றனர். பின்புறத்தில் அச்சுமூலம் அழுத்திய இலச்சினைகளும் உள்ளன. இக்காசுகளிற் சில நீள் சதுரவடிவின; சில வட்டமானவை; வேறு சில நீண்டுருண்டவை. யானையும், ஸ்வஸ்திகாவும் கொண்ட நாணயங்கள் பழையகால ஈழத்து நாணயவகையில் ஒன்றும். சிலவற்றிலே வேதிகையுடன் மரமும், ஸ்வஸ்திகாவும், பிற சின்னங்களும் முன்புறத்திலே, தடிமேலே ஸ்வஸ்திகாவும், வேதிகையும், நந்திபாதமும், பிறவும் உள்ளன. சிலவற்றிலே புத்தசக்கரமும், சைத்யம் முதலியன இடம் பெற்றுள்ளன. சிலவற்றின் முன்பக்கத்திலே, வேதிகையிலுள்ள கொடித்தம்பத்தை நோக்கி யானையும் அதற்குமேலே வட்டமான கோவில் அல்லது தூணுள்ள வீடு அல்லது கொட்டில் போன்றவையும், வேறுசில சின்னங்களும் உள்ளன. இவை பழைய பாண்டிக்காசுகளாயிருக்கலாமெனத் திரு. போ. இ. பீரிஸ் கருதியுள்ளார். பாண்டியரின் பழைய இலச்சினையாகும், சிலவற்றில் எருது காணப்படுகின்றது. பிடரி மயிரில்லாச் சிங்கம் பொறிக்கப்பட்டுள்ளன. நாணயம் மகாசேனன் காலத்தவையெனக் கொட்றிங்ரன் குறிப்பிட்டுள்ளார், கந்தரோடையிலே போல் இ. பீரிஸ் சேகரித்த காசுகளிலே, இந்தியாவிலுள்ள மால்வாக் காசுகளிற் காணப்படும் 'உஜ்ஜயினி இலச்சினை' (தர உள்ள இருவட்டங்கள்) யும், சதகணிச என்ற வாசகமும் உள்ள காசு ஒன்றும் இருந்தது. இது சாதவாஹன காசாக இருக்கலாம்.

### லக்ஷ்மி தகடுகள் (Plaques)

லக்ஷ்மி 'பிளாக்குகள்', அநுராதபுரம், சிலாபம், திஸ்ஸமஹாராம, கீந்தாவூர் போன்ற பிற இடங்களிலே கிடைத்திருப்பினும் யாழ்ப்பாணத்திற் கிடைத்தவையே நேர்த்தியானவை எனப் போல் இ. பீரிஸ் குறிப்பிட்டுள்ளார். இவை நீள் சதுர வடிவின; ஈயம், செப்பு, இரும்பு, சிலிக்கா, நிக்கேல் முதலியன கொண்டு செய்யப்பட்டவை. இவற்றின் முன்பக்கத்திலே தாமரையாசனத்திலே நிற்கும் நிலையிலே லட்சுமி விளங்குகிறார். அவர்கள் இரு கரங்களிலும் கமலங்கள் திகழ்கின்றன. இரு மருங்கிலும் யானைகள் நீர் சொரிகின்றன. சிலவற்றிலே பின்புறமாக ஒளி வட்டம் காணப்படுகின்றது. இவ்வாறு கஜலக்ஷ்மி அழகாக மிளிர்கின்றார். பின்புறத்திலே வேதிகையிலுள்ள ஸ்தம்பத்தின்மீது ஸ்வஸ்திகா முழுநீளத்திற்தும் காணப்படுகின்றது. இக்கஜலக்ஷ்மி நாணயங்கள் வைஷ்ணவ சின்னமாகவும் விளங்குவன. லக்ஷ்மி செல்வத்திற்கு இறைவி; திருமாலின் சக்தி.

### சிங்கக்காசு

பீடரி மயிருள்ள சிங்கம் பொறித்த சில காசுகள் கந்தரோடையிலே கிடைத்துள்ளன; சிங்கம் முன்பக்கத்திலும் மூன்று புள்ளிகளடங்கிய வட்டம் பின்பக்கத்திலும் காணப்படுகின்றன, ஒன்றின் பின்பக்கத்திலே கிளையுள்ள மரமுள்ளது. அழகிய சிறு காசு ஒன்றிலே சிங்கமும் முக்கோண இலச்சினையும் முன்பக்கத்திலும், ஸ்வஸ்திகா பின்பக்கத்திலும் காணப்படுகின்றன. இக்காசு கி. பி. இரண்டு அல்லது மூன்றாம் நூற்றாண்டு காலப்பல்லவக் காசு எனப் போல். இ. பீரிஸ் கருதினார். சிங்கம் பொறித்த மேற்குறிப்பிட்ட காசுவகை இலங்கையிலே அநுராதபுரம் போன்ற இடங்களிலே தென்னிந்தியாவிலும் பார்க்க அதிகமாகக் கிடைப்பதாலேயும், தேசிய சின்னமாகையாலும் இவ்வகை இலங்கைக்குரியதெனக் கொட்ரிங்டன் கருதினார். ஆனால் பல்லவ சின்னங்களிலே சிங்கம் பிரபல்யமான இடம் ஒன்று பெற்றுள்ளது. இது பற்றிய விரிவான ஆய்வு அவசியம். பல்லவரும் இத்தகைய காசுகள் வெளியிட்டுள்ளமை குறிப்பிடற்பாலது. சமீப காலத்திலிது போன்ற சிங்கம் பொறித்த காசு திருக்கேதீஸ்வரத்திலும் கிடைத்தது. அதன் முன்பக்கத்திலே சிங்கமும் பின் பக்கத்திலே பூரணகும்பமும் அயலிலிரு சிறு குத்துவிளக்குகளும் போன்றவை காணப்படுகின்றன. இவ்வகை நாணயம் பல்லவக்காசு என டி. பி. ஹெற்றியாராச்சி என்ற அறிஞர் குறிப்பிட்டுள்ளார். சில காசுகளில் ஏரிக்கட்டுன்ன எருது நிற்கும் நிலையிலே முன்பக்கத்திலும் சக்கரம் மறுபுறமும் உள்ளன. பல்லவரின் பிரதான இலச்சனையாகவும் எருது மிளிர்கின்றது.

### முக்கியத்துவம்

மேற்குறிப்பிட்ட காசுகளிலே காணப்படும் ஸ்வஸ்திகா போன்ற சின்னங்கள் சைவம், பௌத்தம், வைணவம் போன்ற இந்திய சமயங்களுக்குப் பொதுவானவை. எருது போன்றவை சைவ சார்பானவை. கிறிஸ்து ஆண்டிற்குச் சற்று முன்பின்னான காலத்திலே வடமேற்கு இந்தியாவிலாட்சி செய்த இந்தோகிரேக்கர், குறிப்பாகக் குஷாணர் போன்றோர் நாணயங்களிலே எருது, சூலம் போன்ற சின்னங்கள் காணப்படுவதும் குறிப்பிடற்பாலது. லக்சுமி நாணயம் வைணவத் தொடர்பைக் காட்டுவதாம்.

### ரோமக்காசுகள்

ரோமப் பேரரசிற்கும் (கி. மு. இரண்டாம் நூற்றாண்டு தொடக்கம் கி. பி. ஐந்தாம் நூற்றாண்டு வரை) இலங்கை. இந்தியா போன்ற கீழ் நாடுகளுக்குமிடையிலே நெருங்கிய வர்த்தகத் தொடர்புகள் குறிப்பாக கி. பி. முதல் ஐந்து நூற்றாண்டுகளிலே நிலவின, இதன் விளைவாக

பெருந் தொகையான ரோமக்காசுகள் இந்நாடுகளிற்கு இறக்குமதியாயின. இவை பொன், வெள்ளி, செம்பு முதலிய உலோகங்களாலானவை. மேலும், தமிழ்நாட்டிலுள்ள புதுச்சேரியிலும் ரோமக் காசுகள் வெளியிடப்பட்டன. இந்தியாவிற் போன்று இலங்கையிலும் அநுராதபுரம், சிகிரியா, கந்தரோடை, வல்லிபுரம், திருக்கேதீஸ்வரம்முதலிய பல இடங்களிலே ரோமக்காசுகள் கிடைத்துள்ளன. இந்நாணயங்களின் முன் பக்கத்திலே, பொதுவாக இறந்த அல்லது சமகால ரோமப் பேரரசரின் கிரீடம் தரித்த தலையும் அவரின் பெயரும் காணப்படுவன. பின்பக்கத்திலே ஒன்று அல்லது இரண்டு அல்லது மூன்று போர்வீரர் அல்லது சிலுவை முதலிய உருவங்கள் காணப்படுவன.

கந்தரோடையிலே கிடைத்தவற்றுட் பெரும்பாலானவை கி. பி. நான்கு, ஐந்தாம் நூற்றாண்டைச் சேர்ந்தவை. ஒகஸ்தஸ் சீசர் காலத்தனவும் (கி. பி. முதலாம் நூற்றாண்டு) சில கிடைத்ததாகத் தெரிகின்றது. இக் காசுகள் பொதுவாகச் செம்பினாலானவை. விளிம்பிலே சுற்றிவரச் சிறு புள்ளிகள் உள்ளன. உரோமக் காசுகள் கி. பி. ஆறும் நூற்றாண்டிலும் புழக்கத்திலிருந்தன. உரோமக் காசுகளைப் பின்பற்றியும் ஈழத்திலே காசுகள் வெளிவந்தன.

மனித அதாவது அரசரின் வடிவம் தாங்கிய காசுகள் கி. பி. 8 ஆம், 9 ஆம் நூற்றாண்டளவிலே வெளிவரலாயின, இதற்கு முற்பட்டகாலத் தென்னிந்திய அல்லது இலங்கைக்காசுகளிலே மனித வடிவம் இடம் பெறவில்லை. ஆனால் வட இந்தியக்குப்தர் காசுகளிலே மனிதவடிவமுண்டு. ரோமானிய சொலிடுஸ் என்பதை அடிப்படையாகக் கொண்டு இலங்கையிலே கலண்ட என்ற பொற்காசு வெளிவந்தன.

## இடைக்காலப் பாண்டியக்காசு

(கி. பி. 7 — 10 ஆம் நூற்றாண்டுவரை) காலஞ் செல்லப் பாண்டியக் காசுகளிலே. யானைக்குப்பதிலாக மீன் இலச்சினை இடம் பெற்றது. மீன் இலச்சினை பொறித்த சில நாணயங்கள் கந்தரோடையிலும் கிடைத்துள்ளன. ஒரு செப்புக்காசின் முன்பக்கத்திலே படுத்தநிலையிலே நந்தியும், பின்பக்கத்திலே இரு மீன்களும் உள்ளன. இது பாண்டியக்காசு.

## கஹவணு

பிந்திய அநுராதபுர காலத்தினை (கி. பி. 6 — 10 ஆம் நூற்றாண்டுவரை) ச் சேர்ந்த நாணயங்களும் கஹவணு எனவே அழைக்கப்படும். இவற்றிற் பல வகையுண்டு. இக்காலத்து நாணயங்கள் பொன், வெள்ளி, செம்பு ஆகியவற்றாலானவை. பெரும்பாலானவை பொற்காசுகளே. இவை வட்டமானவை; இந்நாணயங்களின் முன்பக்கத்திலே, கோடி (வேட்டி) மேலாடை தரித்து, கிரீடம் அணிந்து நிற்கும் நிலையிலே மனித அரசவடிவமுள்ளது.

இடது கரத்தினை மடித்து ஏதோ (சங்கு, அல்லது மலர்) வைத்திருக்கிறார்: வலது கரம் தொங்குகிறது. சிலவற்றில் ஒருபுறத்திலோ, இருபுறத்திலுமோ விளக்குகள் காணப்படுகின்றன, புள்ளியுள்ள அல்லது இல்லாத நான்கு சிறு வட்டங்கள் உள்ளன. பின்பக்கத்திலே அரசர் இருக்கும் நிலையிலே காணப்படுகிறார். சிலவற்றிலே சதுரக் கோடிழுத்த ஆசனம் உண்டு. இடது கரத்தினை முன்பக்கதிற் போலவே வைத்திருக்கிறார்; தோதி, கிரீடம் அணிந்துள்ளார். வலதுகரம் பூமுந்தாவியுள்ளது. இடப்புறமாக ஸ்ரீலங்காவிபுரம் (அல்லது ஸ்ரீலங்கேஸ்வர) என்ற வாசகம் மூன்று வரிகளிலே நாகரி எழுத்திலுள்ளது. பெயரன்றி ஈழத்தலைவன், அல்லது அரசன் எனப் பொருள்படும் வாசகமே காணப்படுகின்றது. சில காசுகளிலே மன்னர், பிறை, அல்லது, தாமரை மலர், சங்கு, மல்லிகைப்பூ, சக்கரம போன்றவற்றை இடக்கரத்திலே முன்பக்கத்திலும் பின்பக்கத்திலும் கொண்டுள்ளார். இங்கு காணப்படும் மனித உருவம் காத்தற் கடவுளான திருமால் எனவும சில அறிஞர் விளக்கம் அளிப்பர். நாடுகாக்கும் மன்னரைத் திருமாலாகக் கொள்ளுவதுண்டு. "திருவுடை மன்னரைக் காணில் திருமாலைக் கண்டேன்" என ஆழ்வார் ஒருவர் குறிப்பிட்டுள்ளமை கவனித்தற்குரியது.

மேற் குறிப்பிட்டதின் அரைவாசிக்காக அர்த்த கஹணு எனவும், காற்பகுதி பல அல்லது தெக எனவும் எட்டிலொன்று அக எனவும் கி. பி. 8 — 10 ஆம் நூற்றாண்டுவரை அழைக்கப்பட்டன இவை சிறியவை. மேற் குறிப்பிட்ட காசிலுள்ள இலச்சினைகள் சில இவற்றிலும் உள்ளன. இவற்றிலே ஸ்ரீலங்கா என்ற வாசகம் நாகரிலிபியிலுள்ளது. சிலவற்றிலே லக்ஷ்மி நிற்கும் நிலையிலே தாமரைமலர்மேலே காணப்படுகிறார். மறுபுறத்திலே லக்ஷ்மி என்ற வாசகமும் நாகரி லிபியிலுள்ளது. வேறு சிலவற்றிலே அர்த்த சந்திரன், தாமரைப்பூ முதலியனவும் நந்தக அல்லது உரக அல்லது நாக அல்லது இரக (அல்லது அரக) என்ற வாசகம் நாகரி எழுத்திலும் காணப்படுகின்றன. நாணயங்களிலே பெரும்பாலும் வட இந்திய நாகரி எழுத்துப் பயன்படுத்தப்பட்டதிலிருந்து இவை வெளிநாட்டு வர்த்தகத்திற்கும் பயன்படுத்தப்பட்டமை குறிப்பிடற்பாலது. நாகரி லிபி வடமொழியினை எழுதுவதற்கே பயன் படுத்தப்பட்டதாகும். இந்திய லிபிகளின் தாய் லிபியாக விளங்கிய பிராமி லிபியிலிருந்தே தற்கால இந்திய லிபிகள் அனைத்தும் பிரதேசவாரியாக வளர்ந்து, பிரதேச மொழிகளை எழுதுவதற்குப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன, குப்தர் காலத்திலேயும், அதற்குப் பின்னரும் வடமொழியினை எழுதுவதற்கு வட இந்தியாவில் உருவாக்கப்பட்டுவந்த லிபியே நாகரி லிபியாகும். வடமொழி இந்தியப் பொதுமொழியாக மட்டுமன்றி,

இலங்கை: தென்கிழக்காசியா, மத்திய ஆசியா முதலியனவற்றின் பொது மொழியாகவும் நூற்றாண்டுகளாக விளங்கி வந்தமை குறிப்பிடற்பாலது. மேற் குறிப்பிட்ட வகையினைச்சேர்ந்த நாணயங்கள் சில கந்தரோடையிலும் கிடைத்துள்ளன. இந் நாணய வகை குப்தர்கால (கி. பி. 4—6 அம் நூற்றாண்டுவரை) நாணயச்சாயல் கொண்டவை. இவற்றிலே காணப்படும் உருவங்கள், குறிப்பாக, மன்னர் உருவங்கள், லக்ஷ்மி, நாகரி லிபி முதலியவை குப்தநாணயவியலின் சாயலை நினைவூட்டுவன.

## மத்தியகால நாணயங்கள்

கி. பி பதினொராம் நூற்றாண்டு தொடக்கம் பதினாறாம் நூற்றாண்டு வரையுள்ள இலங்கையிலே வெளிவந்த நாணயங்களிலே பொதுவான அம்சங்கள் சிலவற்றைக் காணலாம். இவற்றின் முன்புறத்திலே அநுராதபுர காலப் பிற்பகுதி நாணயங்களைப்போன்று நிற்கும் நிலையிலும், பின்புறத்திலே இருக்கும் நிலையிலும் மன்னர் காணப்படுகிறார்; பின்புறத்திலே மன்னருடைய பெயர் நாகரி லிபியிலே பொறிக்கப்பட்டுள்ளது; முன்னையவற்றிற் போன்று நாணயத்தின் விளிம்பிலே சுற்றிவரச் சிறு புள்ளிகள் உள்ளன.

தன்னுடைய பெயரினை நாணயத்திலே முதன் முதலாகப் பொறித்த சிங்கள அரசன் முதலாம் விஜயபாகுவாகும் (1055 — 1110). இவனுக்கு முன் இலங்கையைக் கைப்பற்றி ஆண்ட சோழப் பெருமன்னர் (985 — 1070). குறிப்பாக முதலாம் ராஜராஜன் அநுராதபுர முடிபுகால ஈழ நாணயங்களை வெளியிட்டான். இவற்றிலே ஸ்ரீலங்காவிபுர போன்ற வாசகத்திற்குப் பதிலாக ராஜராஜனின் பெயர் ஸ்ரீ ராஜராஜ என இடம் பெற்றது. இவ்வகை நாணயங்கள் இலங்கையிற் புழக்கத்திற்காக அடிக்கப்பட்டவையாம். ஆனால், ராஜராஜனுக்கு முன்பே ஈழக் காசுகள் தமிழகத்திலே வியாபாரத்திற்காகப் புழக்கத்திலிருந்தன. இவற்றை 'ஈழக்காசு எனவும்' 'ஈழ மனிதன' பொறித்த காசு எனவும் தமிழகத்தில் அழைத்தனர். ராஜராஜன் தொடங்கிய முறையினைப் பின்பற்றி விஜயபாகு தன் பெயரிலே தரம் குறைந்த பொன், வெள்ளி ஆகியவற்றில் ஓரளவும், பெருமளவு செம்பிலும் காசுகளை வெளியிட்டான். இவற்றிலே மன்னர் பெயர் ஸ்ரீ விஜயபாஹு என நான்கு வரிகளிலே காணப்படுகிறது.

இம்மன்னனுக்குப்பின் முதலாம் பராக்கிரமபாகு (1153 — 1186) அவனைப்போலவே தன் பெயரிலே (ஸ்ரீ பராக்கிரமபாஹு) மூன்று உலோகங்களிலும் காசுகள் வெளியிட்டான். இவனுக்குப் பின் பொற்காசு, வெள்ளிக்காசு மிக அருமையாகவே பயன்படுத்தப்பட்டது. வெள்ளி முலாம் பூசிய செப்புக்காசுகளும் வெளிவந்தன.

நிசங்கமல்லன் (1187 — 1196), சோடகங்கன் (1196 — 1197) லீலாவதி (1197 — 1200) சாஹஸமல்லன் (1200 — 1202) தம்மாசோகதேவ (1208) முதலியோருடைய செப்புக்காசுகள் பெருந்தொகையாக யாழ்ப்பாணத்திலும் கிடைத்துள்ளன. எடுத்துக்காட்டாகப் பண்டத்தரிப்பிலே லீலாவதியின் நான்கு நாணயங்களும், மட்டுவிலிலே லீலாவதியின் அறுபது காசுகளும், சாஹஸமல்லனின் அறுபது காசுகளும் கிடைத்துள்ளன. கந்தரோடை, வல்லிபுரம், தொல்புரம், புங்குடுதீவு முதலிய இடங்களிலும் சாஹஸமல்லனின் காசுகள் கிடைத்துள்ளன.

தம்பதேனிய காலத்திய (கி. பி. 13 — 14 ஆம் நூ.) காசுகள் யாழ்ப்பாணத்திலும் பல இடங்களிலே கிடைக்கின்றன. பராக்கிரமபாகு (குறிப்பாக இரண்டாம் பராக்கிரமபாகு) (1236 — 1270), விஜயபாகு (குறிப்பாக நாலாம் விஜயபாகு (1270 — 1272), புவனேகபாகு (குறிப்பாக முதலாம் புவனேகபாகு) (1272 — 1284) காலத்திய காசுகள் கந்தரோடை, வல்லிபுரம், அச்சுவேலி, நெல்லிப்பழை, புங்குடுதீவு முதலிய இடங்களிலே கிடைக்கின்றன. 1972 லே நெல்லிப்பழையிலே இம்மூன்று அரசரின் ஏழு நாணயங்கள் முட்டியொன்றிலே திரு. ஆ. சிவநேசச்செல்வன் அவர்களுக்கு கிடைத்துள்ளன. ஆனால், இம் முட்டியிலேயிருந்த பல நாணயங்கள் வேறு நோக்கங்களுக்காக உருக்கப்பட்டு விட்டன! இம்மூன்று மன்னர் காலத்திலே, யாழ்ப்பாணத்திலே, கலிங்கர், சாவகர், தமிழர் ஆகியோரின் ஆதிக்கம் நிலவியதாலே இக்காசுகள் வியாபாரத் தொடர்பாலேதான் இங்கு கொண்டுவரப்பட்டிருப்பன.

கோட்டையரசனான ஆறாம் பராக்கிரமபாகுவின் (1412 — 1467) நாணயங்கள் பல கந்தரோடை, வல்லிபுரம், பூலோலி, நல்லூர், கொக்குவில் முதலிய இடங்களிலே கிடைத்துள்ளன. இவனின் காசுகளிலே சிங்கமும் பொறிக்கப்பட்டுள்ளது. இவன் சில காலமாக (1450 — 1467) யாழ்ப்பாணத்தையும் இணைத்து ஆட்சி செய்தவன். இதனாலிவனின் காசுகள் பல கிடைக்கின்றன; வியாபாரத்துக்கும் இவை கொண்டுவரப்பட்டிருக்கலாம்.

**சேது நாணயங்கள்**

கி. பி. பதின்மூன்றாம் நூற்றாண்டின் பிற்பகுதி தொடக்கம் கி. பி. 1619 வரை யாழ்ப்பாணத்திலே தமிழ்மன்னர் ஆட்சி செலுத்தினர். இவர்கள் ஆரியச்சக்கரவர்த்திகள் என்ற குடும்பப் பெயராலும் அழைக்கப்படுவர். இவர்கள் தமக்கெனத் தனிப்பட்ட நாணயவகையொன்றினை வெளியிட்டனர். இந்நாணயம் சோழப்பெருமன்னர் (கி. பி. 10 — 13 நூ.), சமகாலச் சிங்கள மன்னர் நாணயங்களைப் பின்பற்றிவந்த புதிய வகையெனலாம். இதன்

முன்பக்கத்திலே நிற்கும் நிலையிலே மன்னர் உருவமுள்ளது. அவர் கிரீடம் தோகி, மேலாடை முதலியன தரித்துள்ளார், இருபுறங்களிலும் குத்துவிளக்குகள் உள்ளன; சிலவற்றிலே சூலமும் உண்டு. இடது கரத்திலே உயர்த்திச் சங்கு அல்லது மலர் வைத்திருக்கிறார். பின்புறத்திலே கம்பீரமான தோற்றமுள்ள எருது படுத்திருக்கும் நிலையிலே காணப்படுகிறது. அதன் மேலே இளம் பிறையும் சே (சே) து என்ற வாசகமும் உள்ளன. சமகாலச் சிங்கள மன்னர் காசுகளிலே அரசரின் பெயரே இடம் பெற, யாழ்ப்பாண அரசர் தம் பெயரைக் குறியாது சேது என்ற வாசகத்தையே கொண்டனர். இஃது அவர்களின் இலச்சனைகளில் ஒன்றாம். ஆரம்பகால நாணயங்களிலே பின்புறமாக நந்தியில்லை. ஆனால் மன்னர் உருவம் உண்டு. சிலவற்றிலே அழகிய தாமரைமலர் நடுவண் நந்தி விளங்குகின்றது. இந்நாணயங்கள் பெரும்பாலும் செப்பு உலோகத்திலே வெளிவந்தன. ஆனால் சிறிய அளவிலே, பொன், வெள்ளிக்காசுகள் வெளிவந்ததாகத் தெரிகின்றது. இவை கல்லூர், கோப்பாய், மானிப்பாய், அச்சுவேலி, கந்தரோடை, வல்லிபுரம், நாகர்கோவில், மண்கும்பான் முதலிய பல இடங்களிலே கிடைத்துள்ளன.

### சோழ பாண்டியப் பேரரசு நாணயங்கள்

(கி. பி. 10 — 14 ஆம் நூ. வரை) ஆதிக்கத் தொடர்பாலும், கலாச்சார, சமய, வியாபாரத் தொடர்பாலும் சோழப் பெருமன்னர், பாண்டியப் பெருமன்னர் நாணயங்கள் இலங்கையின் பிற பகுதிகளிற் போன்று, யாழ்ப்பாணத்திலும் கிடைத்துள்ளன. நாரந்தனையிலே முதலாம் ராஜராஜன் காலத்திய செப்புக்காசுகள் குவியலாகக் கிடைத்துள்ளன. இவற்றுள் இருபத்தெட்டுக் காசுகள் யாழ்ப்பாணம் நூதனசாலையில் உள்ளன. இவற்றோடு வெளிவந்த ஆறு சேரக்காசுகள் தேய்ந்துவிட்டன; விபரங்கள் தெளிவில்லை. கந்தரோடை போன்ற இடங்களிலும் சோழக் காசுகள் கிடைக்கின்றன. இரண்டாம் பாண்டியப் பேரரசு காலத்திய (கி. பி. 13 ஆம் நூ.) செப்புக்காசுகள் கந்தரோடை, கல்லூர் முதலிய இடங்களிலே கிடைத்துள்ளன. இப்பாண்டியக் காசுகளில் ஒருபக்கத்திலே மன்னர் நிற்கும் நிலையில் உள்ளார். மறுபுறத்திலே இரு மீன்களும், மன்னர் பெயர் அல்லது விருதுப் பெயரும் காணப்படுவன.

### வீராயர்பணம்

கி. பி. 14 — 17 ஆம் நூற்றுண்டுவரை தென்னிந்தியாவிலே பல இடங்களிற் புழக்கத்திலிருந்த 'வீராயர் பணம்' என்ற வகையினைச் சேர்ந்த பொற்காசுகள் சில கந்தரோடை, வட்டுக்கோட்டை முதலிய இடங்களிலே கிடைத்துள்ளன. இவை வியாபாரத் தொடர்பாலோ, சமய கலாச்சாரத் தொடர்பாலோ, அரசியல் தொடர்பாலோ கொண்டுவரப்பட்டிருக்கலாம்.

## குஜராத் காசுகள்

அல்லைப்பிட்டியிலே 1922 ல 179 குஜராத் பொற் காசுகளடங்கிய சாடியொன்று விஞசி லிப்பனுக்குக் கிடைத்ததாம் ஆனால் இவற்றின் விபரங்கள் தெரியவில்லை.

## சீனக்காசுகள்

கி. பி. பன்னிரண்டாம் நூற்றாண்டினைச் சேர்ந்த சீனக்காசுகள் சிலவற்றினைக் கோவையாகக் கந்தரோடையினைச் சேர்ந்த திரு. பொன்னம்பலம் ஆசிரியர் பெற்றுள்ளார். இக்காசுகளுக்கு நடுவிலே துளையுண்டு. இவை இலங்கை, சீன வியாபாரத் தொடர்பாலே கொண்டுவரப்பட்டவை. மேலும், சமகாலச் சோழப் பேரரசிற்கும், சீனாவிற்குமிடையிலே வர்த்தகத் தொடர்புகள் நிலவியமையும் குறிப்பிடற்பாலது.

## அராபியக் காசுகள்

வல்லிபுரத்திலே மத்தியகால அராபியக் காசுகள் சில கிடைத்துள்ளன. அவற்றின் விபரங்கள் தெரியவில்லை. கொடிகாமத்திலே வெளிவந்த மகமதியக் காசுகளின் விபரங்களும் அறியப்படவில்லை.

## ஐரோப்பியக் காசுகள்

கி. பி. 16 ஆம் நூற்றாண்டிலே வந்துவிட்டாலும் போர்த்துக்கேயர் ஆதிச்சம் 17 ஆம் நூற்றாண்டு முற்பகுதியிலேதான் யாழ்ப்பாணத்திலேற்பட்டது. (1619 — 1658) இவர்களைத் தொடர்ந்து டச்சுக்காரர் (1658 — 1796) பிரித்தானியராதிக்கம் (1796 — 1948) நிலவியது. இலங்கையில் இவர்களாட்சிக்குட்பட்டிருந்த பிற பகுதிகளிற் போன்று யாழ்ப்பாணத்திலும் இவர்களின் நாணயங்கள் பல கிடைக்கின்றன. இவற்றுட் பெரும்பாலானவை செப்புக்காசுகள், வெள்ளிக் காசுகளும் குறிப்பிடற்பாலன.

இவ் ஐரோப்பியர் தத்தம் தாய் நாடுகளிலேயுள்ள நாணயவியலைப் பின்பற்றிக் கைப்பற்றிய நாடுகளின் சூழ்நிலைக்கேற்ப நாணயங்கள் வெளியிட்டனர். போர்த்துக்கேயக் காசுகளிலே பொதுவாக முன்பக்கத்திலே மரபுமுத்திரைச் சின்னமும் (Coat of arms) சுற்றிவரப் புள்ளி வட்டமும், கோடாக அமைந்த வட்டங்களும் உள்ளன. பின்பக்கத்திலே, முன்பக்கத்திற்போன்று வட்டங்கள் உள்ளன; நடுவே மரபுவழிச் சின்னமும் நேராக ஐந்து கோடுகளும் குறுக்காக இரு கோடுமுள்ள சதுரமுள்ளது. இவற்றின் நடுக்கோடு உயர்ந்துள்ளது. இச் சதுரத்தின் இருபுறமுமிவை வெளியிட்ட ஆண்டு இரண்டாகப் பிரித்துப் பொறிக்கப்பட்டுள்ளது. இதிற் காணப்படும் சின்னம் "கிரிடியன்" எனப்படும். சில நாணயங்களின் பின்பக்கத்திலே யோவான் ஸ்நானன் (John the Baptist) போன்ற ஞானியின் உருவமுண்டு. சிலவற்றிலே சதுரத்தற்

குப் பதிலாக முட்டை வடிவக் கோடுகள் உள்ளன. நல்லூர், கந்தரோடை போன்ற இடங்களிலே போத்துக்கேயக் காசுகள் கிடைக்கின்றன.

சிறிய, பெரிய அளவுகளிலே டச்சுக்காசுகள் யாழ்ப்பாணத்திலே நல்லூர், கந்தரோடை, வல்லிபுரம் நாகர்கோவில் முதலிய இடங்களிலே கிடைக்கின்றன. இந் நாணயங்களின் ஒரு புறத்திலே டச்சுக் கிழக்கிந்தியக் கம்பனியைக் குறிக்கும் V. O. C எழுத்துக்களும், வெளியிட்ட ஆண்டும் காணப்படும். சிலவற்றிலே பெறுமதியினைக் குறிக்கும் தமிழ் எழுத்துக்கள் உள்ளன. சில காசுகளின் மறு புறத்திலேதான் ஆண்டு காணப்படுகிறது; சிலவற்றிலே இலையுடன் மலர்வளையம் உண்டு. புள்ளிகள் உள்ளன சிலவற்றிலே சிங்காசனத்தை நோக்கிய இரு கொடிகளும், சிங்கங்களும் உள்ளன. டச்சுக்கார இலங்கையிலே யாழ்ப்பாணம், கொழும்பு முதலிய இடங்களிலும், இந்தியாவிலே மதுரை, நாகபட்டினம் போன்ற இடங்களிலும் வெளியிட்ட காசுகள் கிடைத்துள்ளன. நாகபட்டினம் காசுகளின் முன்புறத்திலே வீரராயர் பணத்திற் போன்று தேய்ந்துபோன மனித உருவமுண்டு. பின்பக்கத்திலே நாகபட்டினம் எனத் தமிழில் எழுதப்பட்டுள்ளது. பட்டேவிய நாணயமும் கிடைக்கிறது. யாழ்ப்பாணத்திலே, சேது நாணயங்கள், மத்திய காலச்சிங்கள மன்னர் நாணயங்கள், டச்சு நாணயங்கள் ஆகியனவே மிகக் கூடுதலாகக் கிடைப்பதாகக் கொட்றிங்ரன் குறிப்பிட்டுள்ளார்.

பிரித்தானிய மன்னர், கிழக்கிந்தியக் கம்பனி வெளியிட்ட நாணயங்கள் கிடைக்கின்றன. இலங்கையிற் பிரித்தானியர் பத்தொன்பதாம் நூற்றாண்டு பயன்படுத்திய காசுகளிலே முடிதரித்த மன்னர் தலையும், பெயரும் ஒரு புறத்திலும், மறு புறத்திலே யானையும் ஆண்டும் காணப்படுங் காசு குறிப்பிடற்பாலது. ஐரோப்பியர் காசுகளிலே ஆண்டு குறிப்பிட்டிருப்பது கவனித்தற்பாலது.

இவ்வாறு நெடுங்காலமாகப் பல்வேறு காசுகள் யாழ்ப்பாணத்திலே புழங்கி வந்தமையினை ஓரளவாவது அறியலாம். இலங்கையின் பிறபகுதிகளோடும், அயலிலுள்ள இந்தியா குறிப்பாகத் தமிழகத்துடனும் மேற்கே ரோமப் பேரரசு, அராபியா, ஐரோப்பா, முதலிய நாடுகளுடனும், கிழக்கே சீனா முதலிய நாடுகளுடனும் யாழ்ப்பாணம் தொடர்பு கொண்டிருந்ததை நாணயங்கள் ஓரளவாவது எடுத்துக் காட்டுகின்றன.

தொடர்ச்சியான வரலாற்று இலக்கிய மரபோ, சாசனவியல் மரபோ கிடைக்காமையாலே பூரணமற்றிருக்கும் யாழ்ப்பாண வரலாற்றின் சில இடைவெளிகளை நிரப்புதற்காவது நாணயவியல் உதவும். ஆனால் துரதிர்ஷ்டவசமாக யாழ்ப்பாணத்திலே கிடைக்கும் காசுகள் செவ்வனே ஒன்று சேர்க்கப்படுவதில்லை. சில காசுகள் அவற்றின் உலோகப் பெறுமதிக்

காக உருக்கப்படுகின்றன. புதிய நாணயங்களுக்காகப் பழையகாசுகள் பிறநாட்டவர்க்கும் உள்நாட்டவர்க்கும் விற்கப்படுகின்றன, எஞ்சியவையே திரு. சி. பொன்னம்பலம் போன்ற சில தனிப்பட்டவர்களின் சேகரிப்புகளிலும் நூதனசாலைச் சேகரிப்புகளிலும் வெளிநாடுகளிலுள்ள நூதனசாலைகளிலும் தனிப்பட்டவர் சேகரிப்புகளிலுமுள்ள யாழ்ப்பாணக் காசுகள் முறைப்படி ஆராயப்பட வேண்டும். யாழ்ப்பாணத்திலண்மையிலே தோற்றுவிக்கப்பட்டுள்ள யாழ்ப்பாணத் தொல்பொருளியற் கழகம் யாழ்ப்பாணத் தொல்பொருளியலைப் பேணிக் காப்பதிலும், அதுபற்றிய தகவல்களையும் முக்கியத்துவத்தினையும் பொது மக்களுக்கு எடுத்துக் காட்டுவதிலும் ஈடுபட்டு வருகின்றது. எமது பூர்வீக வரலாறு துலங்குவதற்கு நாணயவியலும் அவசியம்,

## உசாத்துணை நூல்கள்


1. Codringtion H. W. — Ceylon Coins and Currency Colombo — 1924
2. Elliot Sir Walter — Coins of Southern India London 1886
3. Morgan E. V. — A History of Money. Pelican orginal. Great Britan 1965
4. Pieris P. E. — Nagadipa II. Coins Journal of the Royal ASiatic Society Ceylon Branch Vol. 72. 1919 P. 45-60
5. Sircar D. C. — Studies in Indian Coins. Delhi 1968


அ. இ. மி அச்சகம், மானிப்பாய.